**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2019**

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்குரிய பெறுமதி மற்றும் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்குரிய பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள், இருப்பு சான்றிதழ்கள் போன்ற ஆவணங்கள் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகளாக உறுதிச்சீட்டுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் 09 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 1,386,630 கூட்டுத்தொகையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்குரிய எவ்வித சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. | பட்டியல்கள் தவறுதலாக காணாமல் போயிருந்தன. எதிர்காலத்தில் இந்நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக் களுடன் அதற்குரிய உறுதிப்படுத்தும் மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| i | நிதிப் பிரமாணம் 137 | பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகரிக்கப்படாத 162 உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 17,191,909 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தவறொன்று இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக்கொள்வதுடன் பொறுப்பு சபை கூட்டங்களின் போது அந்தந்த காலப்பகுதிக்குள் செய்யப்படும் கொடுப்பனவு அனைத்தும் அங்கீகரிப்படுள்ளதாக | பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகாரம் செய்யப்பட வேண்டும் |
| ii | நிதிப் பிரமாணம் 138 மற்றும் 257 | சான்றுறுதிப்படுத்தப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 171 உறுதிச் சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தாமல் ரூபா 17,845,862 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இத்தவறை தவிர்த்து முறையான வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இநடவடிக்கை எடுக்கப்படுள்ளதாக | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| iii | நிதிப் பிரமாணம் 139 | உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட மொத்த தொகை முறைப்படி செலுத்தப்பட்டதாக மற்றும் அக்கொடுப்பனவு செய்யப்பட்டமைக்காக "கொடுப்பனவு செய்யப்பட்டது" என்ற முத்திரையை உறுதிச்சீட்டில் இட்டு அதிகாரமுள்ள ஒரு நபரினால் சிற்றொப்பம் இடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 171 உறுதிச் சீட்டுக்களால் மேற் கொள்ளப்பட்ட ரூபா 17,845,862 ஆன கொடுப்பனவிற்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இத்தவறினைத் தவிர்ப்பதற்காக முறையான வகையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | கொடுப்பனவுகளின் போது பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| iv | நிதிப் பிரமாணம் 272 (3) | ரூபா 146,950 ஆன கொடுப்பனவு களுக்குரிய 8 உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | தவறுதலாக கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போயுள்ளன. எதிர்வரும் காலங்களில் அத்தகை காணாமல் போதல இடம்பெறாமல் இருக்கவும் அதன் பிரகாரம் முன்னெச்சரிக்கை நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| v | நிதிப் பிரமாணம் 1646 | அம்புலுவாவ உயிரின பல்வகை நிலையத்தின் 03 வாகனங்களுக்குரிய மீளாய்வாண்டின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மாதாந்தம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | தொகுதிக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஓட்டத்தில் ஈடுபடுவதால் ஓட்டக் குறிப்புக்கள் பயன் படுத்தப்படவில்லையென | பிரமாணங்களின் பிரகாரம் ஓட்டக் குறிப்புக்கள் மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 5,157,117 தொகை செலுத்தி தனியார் கம்பனியொன்றிடமிருந்து வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக பெறுகை வழிகாட்டிக்கோவை பின்பற்றப்பட்டிருக்கவில்லை | மதிப்பீட்டுப் பெறுமதியை விட குறைவாக பெற்றுக் கொண்டுள்ளதாக | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்புலுவாவ உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2009 இன் 44 ஆம் இலக்க 4 ஆம் பிரிவின் (அ) முதல் (க) வரையான 20 நோக்கங்களில் ஆட்களின் விளையாட்டு மற்றும் களியாட்ட நடவடிக்கைகள் தொடர்பான இயலுமைகளை அபிவிருத்தி செய்வதற்காக போதியளவு வசதிகளை வழங்குதல், விவசாயிகளை தைரியப்படுத்தல் மற்றும் சமூகத்தில் இளையோர் விவசாய அமைப்புக்களை தாபித்தல் அம்புலுவாவ மலையைச் சுற்றிய பிரதேசத்தை மேம்படுத்துதல் | நிதியத்திற்கு கிடைக்கும் வருமானம் பயன்படுத்தப்பட்டு தொகுதியில் பல அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற் கொள்வதற்காக பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழிலாளர்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு நியாயமான சம்பளமொன்றின் கொடுப்பனவு அடிப்படையில் அவர்களின் நிலைத்திருதன்மைக்காக உபகாரம் செய்தல், வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மற்றும் புத்திசாதுரியமாக வங்கிகளிலும் ஏனைய நிதி நிறுவனங்களிலும் முதலீடு செய்வதற்கும் ஆட்களை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டில் நிதியத்தால் போதியளவு நடவடிக்கைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒத்துழைத்தல், எதிர்வரும் செயற்பாடுகளுக்காக வெவ்வேறு பிரிவுகள் தொடர்பாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களை உருவாக்குவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தல், சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகள் மூலம் சிறந்த ஒத்துழைப்பொன்றை ஏற்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் அதிகளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக. |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தர் சிலையொன்றை அமைப்பதற்காக ரூபா 265,500 செலவு செய்யப்பட்டு கருங்கல் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதும் அளவீடு செய்து அக்கருங்கற்களை செயற்திறனான செயற்பாடொன்றிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இச்செயற்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற இடத்தின் அமைவிடத்தின் பிரகாரம் கற்களை அடுக்கி வைக்க முடியாதிருந்ததுடன் வெடி வைப்பதற்கு முன்னரும் பின்னரும் கிடைக்கும் அளவுகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக வெடிக்கும் போது அதிகளவிலான கற்கள் கீழே உள்ள பள்ளத்தாக்கில் விழுந்துள்ளதாக | உடைக்கப்படும் கற்களை அளவிட்டு ஆக்கபூர்வமான செயற்பாடொன்றிற்காக பயன்கடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்புலுவாவ நிதியத்திடம் இருக்கின்ற ரூபா 5,400,000 ஆன நூலக கட்டிடம், ரூபா 2,500,000 ஆன சுற்றுலா விடுதி மற்றும் பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத நடன அரங்கம் என்பன மீளாய்வாண்டில் எவ்வித செயற்பாடு களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து இச் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மூன்றாம் தரப்பினருக்கு அரசின் நியதிகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |